தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண் - 35

# திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டுகள்

(முதல் தொகுதி)

பொதுப் பதிப்பாசிரியர்

முனைவர் **தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் மா. செந்தில் செல்வக்குமரன்

முனைவர் சொ. சாந்தலிங்கம்

திரு. சொ. சந்திரவாணன்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

எழும்பூர், சென்னை.

2009

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Tilte | : | **Thirunelveli District Inscriptions Volume - 1** |
| General Editor | : | **Dr. T.S. Sridhar, IAS,**<br>Principal Secretary & Commissioner |
| Copyright | : | Tamil Nadu State Department of Archaeology |
| Subject | : | Epigraphy |
| Language | : | Tamil |
| Publication No. | : | 208 |
| Year | : | 2009 |
| Type Point | : | 11 pt. |
| No. of Pages | : | 340 |
| Edition | : | First |
| Paper used | : | 80 gsm Maplitho |
| Type Setter | : | Gankarani Kaniniyagam<br>Royapettah, Chennai. Cell : 98840 57267 |
| Printer | : | Tamil Nadu State Department of Archaeology |
| Publisher | : | Tamil Nadu State Department of Archaeology<br>Tamil Valarchi Valagam,<br>Halls Road, Egmore,<br>Chennai - 600 008. |
| Price | : | Rs. 202/- |

முன் அட்டை : திருப்புடைமருதூர் சிவன்கோவில் கோபுரம்,
திருநெல்வேலி மாவட்டம்

பின் அட்டை : தாளச்சக்கரம் நெல்லையப்பர் கோவில், திருநெல்வேலி.

அட்டைப்பட வடிவமைப்பாளர் : தே. சத்தியவதி, அச்சுக்கோர்ப்பாளர்

# பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தமிழ் நாடெங்கும் உள்ள கல்வெட்டுகளைப் படி எடுத்துப் படித்து வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளது. 'கல்வெட்டு முனைப்புத் திட்டம்' என்னும் செயல் திட்டத்தில் என் தலைமையின் கீழ்க் கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பல மாவட்டங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுப் பல தொகுதிகளாகக் கல்வெட்டுகள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வரிசையில் திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டுகள் முதல் தொகுதி தற்போது வெளியிடப்படுகிறது.

தென்பாண்டி நாட்டின் வரலாற்றில் திருநெல்வேலி மாவட்டம் மிக முக்கியமானதொரு பங்களிப்பைச் செலுத்தியுள்ளது. வைகைக்கரையில் மதுரையும், தண் பொருந்தப் பேராறு என்னும் தாமிரபரணிக் கரையில் திருநெல்வேலியும் அமைந்து பாண்டிய நாட்டை வளப்படுத்தியுள்ளன. திருநெல்வேலிப் பகுதி முற்பாண்டியர்களாலும், முற்சோழர், பிற்காலப் பாண்டியர், விசயநகரர், நாயக்கர் மற்றும் கேரள மன்னர்களாலும் ஆளப்பட்ட பகுதி. இம்மரபினரின் கோயிற்பணிகளும்,நிர்வாகக் கலாச்சாரப் பணிகளும் பல கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றை வெளிக்கொணர்வதன் மூலம் இதுவரை வெளிவராத பல அரிய செய்திகளைத் தமிழ்ச் சமூகம் அறியும் வாய்ப்பு ஏற்படும்.

இம்முதல் தொகுதியில் திருநெல்வேலி நரகத்தில் அமைந்துள்ள நெல்லையப்பர் கோயிலின் கல்வெட்டுகளும், பாளையங் கோட்டையில் அமைந்துள்ள இராஜ கோபாலசாமி கோயில் கல்வெட்டுகளும் கணிசமான அளவில் இடம் பெற்றுள்ளன. இவைதவிர திருப்புடை மருதூர், வள்ளியூர்,பாலாமடை, இராசவல்லிபுரம், மணப்படை வீடு,கல்லிடைக் குறிச்சி, மேல் பாட்டம் போன்ற ஊர்களில் படி எடுக்கப்பட்ட கல்வெட்டுகளும் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. இவை இப்பகுதியின் அரசியல், சமூக வரலாற்றை அறிவதற்குப் பெரிதும் பயன்படும்.

இக்கல்வெட்டுகளைப்படி எடுத்துப் படித்துப் பதிப்புக்குத் தயார் செய்யும் பணியில் ஆர்வமுடன் பணி ஆற்றியவர்கள் எம் துறை அலுவலர்கள் முனைவர். மா. செந்தில் செல்வக் குமரன், முனைவர் சொ. சாந்தலிங்கம்,திரு. சொ. சந்திரவாணன் ஆகியோராவர். கல்வெட்டுப்படி எடுத்தும் படிக்கும் பணியிலும் பணியாற்றிய இளம் ஆய்வாளர் திரு. உலகய்யா,இந்நூலைப் பதிப்பித்து வெளிக்கொணரும் பணியில் சிறப்பாகச் செயல்பட்ட சிறப்பு நிலைக் கல்வெட்டாய்வாளர் திருமதி. அர. வசந்த கல்யாணி ஆகியோராவர். இவர்கள் அனைவர்க்கும் எனது வாழ்த்துக்களும், பாராட்டுகளும் உரியவை.

இத்தொகுதியை வெளியிடுவதற்கு நிதி உதவி செய்த தமிழ் நாடு அரசுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் கூறும் நல்லுலகம்,வழக்கமாக எம் துறை வெளியீடுகளை வரவேற்றுப் பயன் பெறுவது போல இந்நூலையும் வரவேற்கும் என நம்புகிறேன்.

முனைவர் **தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

# முன்னுரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் அண்மைக் காலங்களில் 'கல்வெட்டு முனைப்புத் திட்டம்' என்னும் திட்டம் செயல்படுத்தப்பட்டு தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறது. தமிழகத்ததின் பல மாவட்டங்களிலும் உள்ள கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டு படித்து பல தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. அவை சமூகவியல், வரலாற்று ஆய்வாளர்களுக்கப் பல புதிய தரவுகளை வெளிக் கொணர்ந்து வழங்கியுள்ளன. அவ்வரிசையில் இத்தொகுதி திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டுகளைக் கொண்டதாக வெளி வருகிறது.

திருநெல்வேலி மாவட்டம் பண்டைய பாண்டிய நாட்டின் தென்பகுதியில் வளமான நிலப்பகுதியைக் கொண்டதாக அமைந்திருந்தது. தமிழகத்தின் ஒரே ஜீவநதி என்று சொல்லத்தக்க தண் பொருந்தப் பேராறு என்னும் தாமிரபரணி பாய்ந்து இப்பகுதியை வளமான பகுதியாக வாழவைத்துக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக இவ்வாற்றின் இருகரைகளிலும் மக்களின் வாழ்விடங்கள் அமைந்து பல அரிய கோயில்களுடன் திகழ்கின்றன. மக்கள் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை விளக்கும் நூற்றுக்கணக்கான கல்வெட்டுகள் இக்கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்பிருந்து இன்றுவரை இவ்வட்டாரத்தின் அரசியல், பொருளாதார, சமூக, சமய வரலாற்றிற்கு உரிய தரவுகளைத் தாங்கியுள்ளன. அவற்றை வெளிக் கொணர்வதன் மூலம் வரலாற்றின் பல இடைவெளிகள் நிரப்பப்படும்.

பாண்டிய நாட்டின் தென்பகுதியில் அமைந்திருந்த இம்மாவட்டம் நிலவியல் ரீதியாக சேரநாட்டின் தென்பகுதியோடு தொடர்புடையதாக இருந்தது. இதன் காரணமாக அவ்வப்போது சேரமன்னர்களின் அரசியல் ஆதிக்கமும் இப்பகுதியில் ஏற்பட்டிருந்தது. அதன் வெளிப்பாடாக அவர்கள் கால கல்வெட்டுகள் சிலவும் ஓரிரு கோயில்களில் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவைதவிர, கி.பி. 10-11-ம் நூற்றாண்டுகளில் பாண்டிய நாடு முழுமையும் சோழர்கள் வசப்பட்டிருந்தது. சோழ மன்னன் முதலாம் இராசராசன் தன் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பாண்டிய நாட்டுப் பகுதிகளில் தன் அரசப் பிரதிநிதிகளாகத் தன் உறவினர்களையே சோழ பாண்டியர் என்னும்பெயரில் நியமித்தான். அவர்களும் இப்பகுதியின் அரசியல்,சமய வரலாற்றில் சில தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளனர். அவர்கள் காலத்து கல்வெட்டுகளும் கணிசமான அளவில் இப்பகுதியில் காணப்படுகின்றன.

சோழர்கள் தங்கள் நாட்டுப் பகுதியில் தமிழ் எழுத்துக்களையே தங்களது கல்வெட்டுகளில் பயன்படுத்தி வந்தனர். ஆனால் அவர்கள் பாண்டிய நாட்டில் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் இப்பகுதியில் ஏற்கனவே பாண்டியர்களால் பயன்படுத்தப்பட்டு,

மக்களுக்கு நன்கு அறிமுகமாகியிருந்த வட்டெழுத்துக்களைத் தங்களது ஆவணங்களைப் பொறிப்பதிலும் பயன்படுத்தினர். இது சோழர்கள் இப்பகுதியில் மேற்கொண்ட ஒரு வகை அரசியல் நிர்வாக உத்தி என்றே கூறலாம். என்வே பாண்டியர்களாலும், சோழர்களாலும் வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் பெரும் எண்ணிக்கையில் வெட்டப்பட்டன என்பதைக் காண்கிறோம்.

பிற்பாண்டியரின் எழுச்சி காரணமாகச் சோழப் பேரரசு ஒரு முடிவுக்கு வந்தது. தம் நாட்டை சோழர்களிடமிருந்து மீட்ட பாண்டிய மன்னர்கள் குறிப்பாகத் திருநெல்வேலிப் பகுதியில் அதிகமான அக்கறையோடு தங்களது செல்வாக்கை நிலை நாட்டினர். அவற்றைப்படம் பிடித்துக் காட்டும் வகையில் பல கல்வெட்டுகள் இங்குள்ள கோயில்களில் இடம் பெற்றுள்ளன. அவர்களது வீழ்ச்சிக்குப் பின் பாண்டிய நாடு விஜய நகரர் ஆட்சியிலும், மதுரை நாயக்கர் ஆட்சியிலும் பல அரசியல் சமூக மாற்றங்களைக் கண்டது, அரசு நிர்வாகத்தில் பாளையப் பட்டுகள், சீர்மை, உசாவடி என்பன போன்ற பிரிவுகள் அறிமுகப் படுத்தப்பட்டுச் சற்று மாறுபட்ட அரசியல் தலைமை தோன்றியது. அதன் வெளிப்பாடுகளும் பல கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன. இவைதவிர தனிப்பட்ட முறையில் அவ்வப் போது வந்த அரசியல் அதிகாரிகள், படைத்தலைவர்கள், செல்வந்தர்கள் தங்கள் பங்குக்குப் பல அறக்கொடைகளை ஏற்படுத்திச் சென்றுள்ளனர். அவற்றை விளக்கத்தக்கப் பல ஆவணங்கள் கல் மண்டபங்கள்,கல் தூண்கள், படித்துறைகள், மதகுகள் போன்றவற்றில் பொறிக்கப்பட்டுள்ளன. அவையெல்லாம் தொகுக்கப்பட்டு இம்முதல் தொகுதியில் வெளியிடப்படுகின்றன. இது ஒரு தொடக்கம், இம்மாவட்டத்தில் ஆற்ற வேண்டிய பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள கல்வெட்டுகள் ஊர்வாரியாகச் சற்று விளக்கப்படுகின்றன. இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள கல்வெட்டுகள் 216. இவற்றில் திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் கல்வெட்டுகள் 96. பாளையங்கோட்டை இராசகோபால சுவாமி கோயில் கல்வெட்டுகள் 41. இவைதவிர சீவலப் பேரி, திருப்புடை மருதூர், வள்ளியூர், விஜய நாராயணம், மணப்படை வீடு, பாலாமடை (எ) உதயனேரி, குருவிகுளம்,தருவை, சாயாமலை, ராஜவல்லிபுரம், திருவேங்கடநாதபுரம், கல்லிடைக் குறிச்சி, சிவகிரி, குறிச்சி, கருங்குளம், புலியூர் குறிச்சி ஆகிய ஊர்களில் படி எடுக்கப்பட்ட கல்வெட்டுகளும் அடங்கியுள்ளன.

## திருநெல்வேலி - நெல்லையப்பர் கோயில் கல்வெட்டுகள்

பாண்டிய நாட்டின் தேவாரப் பாடல் பெற்ற சைவத்தலங்கள் பதினான்கில் ஒன்றாக வைத்து எண்ணப்படும் கோயில் அ/மி நெல்லையப்பர் கோயில். ஐந்து சபைகளில் ஒன்றான தாமிர சபை இங்கு உள்ளது. இங்குள்ள விரிந்த ஆலயத்தில் கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. 19-ம் நூற்றாண்டு வரையான கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. இவை தமிழ், வட்டெழுத்து மற்றும் ஒரு சில சிறந்த கல்வெட்டுகளாகவும் உள்ளன. கோயிலுக்கான நிலக்கொடை, விளக்குகள் வைப்பதற்கான ஆடுகள் கொடை,அதை ஏற்று எண்ணை வழங்க இசைந்த சங்கரப்பாடியார் பற்றிய செய்திகள், பட்ட விருத்தியாகக் கொடுக்கப்பட்ட

நிலங்கள், இசைக் கலைஞர்களுக்கு ஜீவிதமாக வழங்கப்பட்ட நிலங்கள், அண்டை ஊர்களில் செயல்பட்ட பிரமாண மகாசபையாரின் கோயிற் பணிகள் எனப்பல செய்திகள் இக்கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன.இக்கோயிலில் நடந்த குடமுழுக்கு விழா, அதற்கான செலவுத் தொகைகள் பற்றிய குறிப்புகளும் இடம் பெறுகின்றன. பல்வேறு அரசர்களின் பெயரால் நிறுவப்பட்ட 'சந்தி'என்னும் சிறப்பு பூசைகள் அவற்றிற்கான கொடைகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பிற்பாண்டியர் காலத்தில் இக்கோயில் பெற்ற கணிசமான வளர்ச்சி இக்கல்வெட்டுகளின் மூலம் அறியப்படுகின்றன.

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் சில அருமையான கவிதை வடிவில் அமைந்துள்ளமை இங்கு குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும். சிவபெருமானின் அடி முடி காணாத் தோற்றம் ஒரு பாடல் கல்வெட்டில் சிறப்பிக்கப்படுகிறது. மற்றொரு பாடல் கல்வெட்டில் விருதுநகர் மாவட்டம் திருத்தங்கல் கல்வெட்டில் இடம் பெற்றுள்ள ஓர் அதிகாரி தடங்கண்ணிச் சிற்றூருடையான் உய்யநின்றாடுவான் குருகுலத்தரையன் கொடுத்த கொடை கூறப்பட்டுள்ளது. இவன் முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் இருந்த முக்கிய அதிகாரிகளில் ஒருவன். இவனது பாடல் கல்வெட்டு தான் சிவபெருமானுக்காக கணிசமாக நிலம் கொடுத்திருப்பதாகவும் அதனால் சிவபெருமானுக்கு இனி கபாலம் ஏந்தி பிச்சை ஏற்க வேண்டிய அவலநிலை இல்லை என்றும் அங்கதச் சுவைபடக் கூறுவதாக அமைந்துள்ளது. இதே போன்றதொரு செய்தியை இவன் திருத்தங்கல்லிலும் கல்வெட்டாகப் பொறித்துள்ளது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

நெல்லையப்பர் கோயிலின் மேற்குப் பிரகாரத்தில் அமைந்துள்ள ஆறுமுகர் சன்னிதியின் முன்பாக அமைந்துள்ள விரிந்த தாமரை வடிவிலான ஒரு தாளச் சக்கரம் பற்றிய கல்வெட்டு மிகச் சுவையானதாகும். கி.பி. 1870ல் பசுவந்தனை என்னும் கிராமத்தைச் சேர்ந்த பிச்சாண்டி அண்ணாவி என்பவரால் இத்தாளாங்கப் பிரமாணம் கட்டப்பட்டது என்ற செய்தியை இக்கல்வெட்டு தருகிறது.

இக்கோயில் கி.பி. 10-11-ம் நூற்றாண்டில் முற்சோழர் காலத்தில் பல மண்டபங்கள், புதிய சன்னிதிகள் கட்டப்பட்டு நன்கு வளர்ச்சி பெற்றது என்பதற்கான கல்வெட்டு சான்றுகள் இங்குள்ளன. மண்டபங்கள் கட்ட தூண்கள் கொடையளித்த செல்வந்தர்கள், அதிகாரிகள் ஆகியோரின் பெயர்கள் வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. எனவே இவை கோயில் கட்டுமான வரலாற்றை அறிந்து கொள்ளவும் பயன்படுகின்றன. மதுரை அங்கயற் கண்ணி அம்மை கோயிலில் பணிசெய்யும் தலைக்கோலி பட்டம் பெற்ற ஆடல்மகள் ஒருத்தி நெல்லையப்பர் கோயிலுக்குச் செய்த தானமும் ஒரு கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. நெல்லையப்பர் கோயில் அக்காலத்தில் பெற்றிருந்த பூரவலான செல்வாக்கு இங்கு வெளியிடப்பட்டுள்ள கல்வெட்டு ஆவணங்கள் மூலம் பெறப்படுகிறது.

**பாளையங்கோட்டை கல்வெட்டுகள் :**

இன்று பாளையங்கோட்டை என அறியப்படும் நகரம் கல்வெட்டுகளில் ஸ்ரீ வல்லபச் சதுர்வேதி மங்கலம் எனப் பெயர் பெற்றுள்ளது. கீழ்வேம்ப நாடு என்னும் நாட்டுப் பிரிவுக்குள் அடங்கியிருந்த இவ்வூர் பிராமணர்கள் மிகுதியாக வாழ்ந்த ஊராகவும் ஊரின் மத்தியில்

இராசகோபாலசாமி என்று இன்று பெயர் பெற்றுள்ள திருமால் கோயிலையும் கொண்டிருந்தது. இக்கோயில் ஸ்ரீ வல்லப விண்ணகரம் என்று கல்வெட்டுகளில் சுட்டப்பட்டுள்ளது. இங்குள்ள கல்வெட்டுகளில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவை சோழ மாமன்னன் முதலாம் இராசராசன் காலத்தவையாகும். வட்டெழுத்திலும், தமிழிலும் உள்ள இக்கல்வெட்டுகள் இக்கோயில் எந்த அளவுக்கு உயிரோட்டமாக இருந்தது என்பதைக் காட்டுகின்றன. பாரதம்,ராமாயணம் ஆகியவை வாசிப்பதற்கு விருத்தியாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள், வைத்திய போகமாகவும், கணக்கனுக்காகவும், இசைக்கலைஞர்களுக்காகவும் விடப்பட்ட நிலங்கள் எனப் பல செய்திகள் பெறப்படுகின்றன.

பிற்பாண்டியர் காலத்திலும், திருவிதாங்கூர் மன்னர்களின் ஆட்சியிலும் இக்கோயில் நல்ல கவனத்தைப் பெற்றுள்ளது. தற்போதைய அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப் பட்டுள்ள இளவேலங்கால் நடுகற்கள் வரலாற்றறிஞர்கள் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தவை. கயத்தாற்றுப் பகுதியை ஆண்ட வெட்டும் பெருமாள் என்னும் பாண்டிய மன்னனுக்கும், வெங்கலராஜன் என்னும் விசய நகரத் தலைவனுக்கும் இடையில் கி.பி. 1547ல் நடைபெற்ற போரின்போது உயிர் நீத்த கொண்டயங் கோட்டை மறவர்களின் நடுகற்கள் இவை. இக்கல்வெட்டுகளும் இத்தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

தருவை என்னும் சிற்றூரில் உள்ள கல்வெட்டு கேரளத்தைச் சேர்ந்த (மலை மண்டலம்) ராமன் என்பவனால் இளைய பெருமாள் விண்ணகர் என்ற திருமால் கோயில் கட்டப்பட்டதையும்,கோயில் பராமரிப்புக்காக நிலம் கொடை அளிக்கப்பட்ட செய்தியையும் தருகிறது.

சங்கரன் கோயில் வட்டத்தில் உள்ள குருவிகுளம் என்னும் சிற்றூரிலிருந்து நான்கு கல்வெட்டுகள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. கி.பி. 10-ம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டு மெனச்சி என்னும் ஊரைச் சேர்ந்த நாட்டியச் சாத்தன் என்பவன் எடுத்த பலி பீடத்தைப் பற்றிக் கூறுகிறது. மற்ற இரண்டு 19-ம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் தனிமனிதர்களின் கொடையைத் தெரிவிக்கின்றன. இவ்வட்டத்தில் மூவிருந்தாழி என்னும் ஊர்க் கல்வெட்டு இங்கு ஒரு மடவளாகம் அமைக்கப்பட்ட செய்தியைத் தருகிறது.

உதயனேரி (எ) பாலாமடை என்னும் ஊரில் உள்ள திருமால் கோயில் கல்வெட்டுகள் ஆறு இங்கு சேர்க்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் பிற்பாண்டியர் காலத்தைச் (கி.பி. 12 - 13) சேர்ந்தவை. பல ஊர்கள் ஒன்றிணைக்கப்பட்டு முக்கோக்கிழானடிகள் சதுர்வேதி மங்கலம் உருவாக்கப்பட்டுள்ளது. மன்னன் சடையவர்மன் குலசேகரனின் அக்காழ்வி முக்கோக்கிழானடி பெயரால் இச்சதுர்வேதி மங்கலம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மற்ற இரண்டு கல்வெட்டுகள் மணப்படை வீட்டிலிருந்து மதுரைக்கு ஒரு பெருவழி சென்றது பற்றியும் அவ்வழியில் ஒரு கிணறு வெட்டப்பட்டுத் தண்ணீர்ப்பந்தல் வைக்கப்பட்டதையும் தெரிவிக்கின்றன.

நாங்குனேரி வட்டம் வள்ளியூரிலிருந்து நான்கு கல் வெட்டுகள் இத்தொகுதியில் இடம் பெறுகின்றன. அனைத்தும் கி.பி. 13 -ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையே. கைலாசமுடையார் கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலக்கொடை,நாச்சியார்க்கு வழங்கப்பட்ட

பொன் அணிகலன்கள்,போன்ற செய்திகள் தெரியவருகின்றன. மற்றொரு முக்கியமான ஆவணம் சாந்திக் கூத்தில் வல்ல உலக முழுதுடையாள் என்னும் நடனமாது மூன்று யுகங்கண்ட அம்மன் என்னும் பெயரில் ஒரு கோயில் கட்டிய செய்தியைத் தருகிறது.

ராசல்லிபுரம் என்னும் சிற்றூரிலிருந்து 11 கல்வெட்டுகள் இத்தொகுதியில் சேர்க்கப்பட்டள்ளன. இவற்றுள்ள சில நந்தாவிளக்கு எரிக்கக் கொடுத்த கொடைகளைக் குறிக்கின்றன. இவ்வூரில் செயல்பட்டு வந்த வணிக நகரத்து வியாபாரிகள் கோயிலின் வளர்ச்சிக்கு எடுத்த நடவடிக்கைகள் சில கல்வெட்டுகளில் இடம் பெறுகின்றன.

திருவேங்கட நாதபுரம் கல்வெட்டுகள் இரண்டு இக்கோயிலின் நந்தாவிளக்குக் கொடைகள், நிலதானங்கள் பற்றித் தெரிவிக்கின்றன. இவ்வூர் அவனி நாராயணச் சதுர்வேதி மங்கலம் எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

மணப்படை வீடு கல்வெட்டுகள் இரண்டின் மூலம் இவ்வூரின் பெயர் அம்பலத்தாடியான மணப்படை வீடு என இருந்ததை அறிகிறோம். நந்தாவிளக்கு எரிக்கவும்,கோயிலில் திருப்பதியம் பாடவும் கொடுக்கப்பட்ட கொடைகள் கல்வெட்டுகளில் பேசப்பட்டள்ளன.

சீவலப்பேரி திருமால் கோயிலில் உள்ள கல்வெட்டுகள் முற் பாண்டியர், சோழர், பிற்பாண்டியர் காலத்தின் அரசியல் நிலையைக் காட்டுவனவாக உள்ளன. கி.பி. 8-9-ம் நூற்றாண்டைச் சேர்ந்த மாறஞ்சடையன் காலத்திய வட்டெழுத்துக் கல்வெட்டு அணுக்கன் அப்பி நங்கை என்பவள் 22 ஆடுகள் கொடுத்து ஒரு விளக்கு வைத்ததைத் தெரிவிக்கிறது. இவள் சத்ரு பயங்கர முத்தரையன் என்னும் இருஞ்சோ நாட்டுத் தலைவனின் (இன்றைய சாத்தூர் பகுதி) மனைவி ஆவாள்.

முதலாம் இராசராச சோழனின் கல்வெட்டுகள் இக்கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலக் கொடைகளையும்,விளக்குக் கொடைகளையும் தெரிவிக்கின்றன. முதலாம் குலோத்துங்கன் காலக்கல்வெட்டும்,மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலக் கல்வெட்டுகளும் இக்கோயில் பிற்காலத்தில் பெற்றிருந்த வளர்ச்சியினையும் மக்கள் ஆதரவையும் காட்டுவனவாக உள்ளன.

திருப்புடை மருதூர் நாறும்பூ நாத சுவாமி கோயில் கல்வெட்டுகள் சோழ, பாண்டிய, கேரளப் பகுதி மன்னர்களின் செல்வாக்கைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. கி.பி. 9-10-ம் நூற்றாண்டில் வெட்டப்பட்ட முற்பாண்டியன் மாறன் சடையன் கல்வெட்டு விளக்கு எரிக்க 25 ஆடுகள் வழங்கப்பட்ட செய்தியைத் தருகிறது. இராசராச சோழன் காலத்தில் இக்கோயில் பல நிலக்கொடைகளைப் பெற்றுள்ளன. பிற்பாண்டியர் காலத்திலும் நிலக் கொடைகள் வழங்கப்பட்டுள்ளன. பூதல வீர மார்த்தாண்டன் காலத்தில் இக்கோயிலில் பணிபுரிந்த இசைக் கலைஞர்களுக்கு சீவிதமாக நிலங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வூரில் ஓடும் தண்பொருந்தப் பேராற்றின் கரைகளில் மக்கள் பயன்பாட்டிற்காக மண்டபங்களும், படித்துறைகளும் கட்டப்பட்ட செய்திகள் பாடல் வடிவிலான கல்வெட்டுகள் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

மேலச் செவ்வல் என்னும் ஊர்க் கல்வெட்டுகளில் இவ்வூர் செவ்வலான வீர கேரள நல்லூர் எனப் பெயர் மாற்றம் பெற்ற செய்திஅறியப்படுகிறது. நிலக் கொடைகள், விளக்குக் கொடைகள் ஆகிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

கல்லிடைக் குறிச்சி கல்வெட்டு ஒன்று இவ்வூரில் வெள்ளை நாடார்களுக்கும், வெள்ளாள சமுதாய மக்களுக்குமிடையே இருந்துவந்த பிணக்குகளைக் கூறுகிறது. வெள்ளை நாடாரில் சிலர் வெள்ளாளப் பெண்களிடம் முறை தவறி நடந்து கொண்டதையும், கூலிச் சேவகம் செய்தல், தேசங்கையாளுதல் என்னும் பணிகளில் ஈடுபட்டுக் குழப்பம் விளைவித்ததையும் எதிர்த்த வேளாள சமூகத்தினர் எதிர்காலத்தில் அவர்கள் அவ்வாறு செய்யலாகாது எனத் தடைவிதித்து கல்வெட்டில் வெட்டி வைத்துள்ளனர்.

இதேபோன்றதொரு கல்வெட்டு கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம் திருவிதாங்கோடு என்னும் ஊரிலும் கண்டறியப் பட்டுள்ளது. அக்கல்வெட்டின் காலம் கி.பி. 1452 ஆகும். இவற்றின் மூலம் இவ்விரு சமூகத்தவர்க்குமிடையே நெடுங்காலமாக பகைமை இருந்திருக்கலாம் எனக் கருதமுடிகிறது. சிலர் வெள்ளை நாடார்கள் என்பார் தமிழகத்தின் தென்பகுதியில் சிலகாலம் ஆட்சி அதிகாரம் செலுத்தியவர்கள் என்ற கருத்தையும் முன்வைத்துள்ளனர். இது இன்னும் ஆய்வு செய்யப்பட வேண்டிய செய்தியாகும்.

வரலாற்றில் ஒளிபுகாத பகுதிகளில் ஒளிபாய்ச்சும் விதமாக இத்தொகுதி வெளி வருகிறது என்பதில் ஐயமில்லை. இந்நூல் சமூக விஞ்ஞான ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள அறிஞர்களுக்கும், வரலாற்று மாணவர்களுக்கும் பெரும் பயனளிக்கும் என்றும் கருதலாம்.

# THIRUNELVELI DISTRICT INSCRIPTIONS VOL I - INTRODUCTION

'Intensive Epigraphical Campaign' programe was initiated in the state department of Archaeology in recent years and it is bearing fruits successfully. Number of epigraphical volumes are being published regularly by this intensive work. These volumes are serving as most reliable source materials on the socio - economic,religious and political sphere and are very useful to the researchers and scholars. In this series this present volume consists of inscriptions from Thirunelveli district is published now.

Thirunelveli district was the part and parcel of the ancient Pandya country which comprises fertile land mass watered by perennial river Thamiraparani. Because of the ever lasting fertility of this reigion number of settlements flourished on both the banks of the river. Temples of both Saivaite and Vaisnavite religions were built by the rulers of this area and they served a lot in the cultural development of this part of the country. Many number of inscriptions engraved on the walls of the temples, mantapas, bathing ghats etc reveal the history of this region since 8 c. A.D. to present times. By bringing out these records for the perusal of the scholars of history so many missing links in the history of Tamil nadu can be identified and useful for the reconstruction of the real history of Tamil land.

Geographically this land mass lies as the pheripheral region and had close contact with the chera country. Influence of chera rulers in the political arena has been noticed by the stone inscriptions found some temples in this district.

In the times of the Raja raja chola the great whole Tamilnadu came under his umbrella. The fertile Thamira parani delta was well attended by the chola monarchs nominated by Raja raja I as vice roys in the name of chola pandyas. Their role in the religious and social fields are all will documented in the lithic records found in various temples. The cholas utilised only Tamil script in their royal documents and temple inscriptions but Vatteluthu script was unaware in the chola region. When they occupied Pandya region they followed Vatteluthu scripts in their records which was already in vogue among the people. This diplomatic step was very helpful to win over the confidence of the people in Pandya region. So,many number of Vatteluthu inscriptions are found all over the southern pandya region up to 11c AD.

The chola supremacy came to an end in the pandya country by the emergence of later pandya rulers like Mar. Sundrarapandya I. He and his successors paid more attention than ever in the socio - religious activities of Thirunelveli region. Some

pandya rulers were even had the names such as Thirunelveli Perumal. Many number of inscriptions of later Pandya rulers are noticed and included in this volume. Because of the family fued among the pandya brothers in winning over the crown Delhi sultans took over the riot torn pandya country and administered for a short period. Vijayanakara rulers,came into the rescue of pandya country and to establish the Hindu rule appointed their Dhantanayakas to control this region. This leads to the emergence of Madurai Nayak dynasty which held sway over at least 200 years in the politics of this part of the country. They brought some new ideas in the administration,divided the country into 72 palayams and appointed poligars for their administration. New administrative units like sirmai, palaiyams etc., were introduced by them. Their role in the political scenario were well documented in various records. Some of them are collected and included in this volume.

Totally 216 inscriptions are given in this volume. Among them records fromNellaiyappar temple, Thirunelveli (96) and Rajagopalasamy temple at Palayamkottai (41) occupy considerable part of this volume. Next to them, inscriptions from Sivalapperi, Thiruppudai maruthur, Valliyur, Vijayanarayanam, Karungulam, Manappadai vidu, Palamadai (a) Uthayaneri, Kuruvikulam, Taruvai, Rajavallipuram, Kallididaikurichchi and some more are given for the first time.

**Nellaiyappar temple inscriptions :**

This siva temple is considered as one among the 14 Saiva centers sanctified by the Devaram hymnists in Pandya country. This temple copper hall exists one among the five divine halls (Pancha Sabhas) of Siva in Tamil nadu, where Lord Nataraja played his Anantha Thandava. This spacious temple consists of records from 8th C A.D. to 19C A.D. Vatuthu,Tamil and Grantha scripts have been applied for engraving records in different periods. Land donations, cattle donations for lighting perpetual lamps,the role of oil mongers,land endowments as Bhatta Vridhi, and for musicians are all well preserved in the inscriptions. The role of Brahmi Mahashabas, Kumbabisheka ceremonies conducted at different times,their actual expenditure details are also vividly given. Different 'santhi' worships instituted by the kings on their natal star, donations for their maintenance and the temples development during the pandya rule are all well documented in the records.

Some of the records of this temple are composed in a beautiful verse form. Different iconographic forms of Siva like Lingothbhava, Bhikshadana are mentioned in these verses. Quite interestingly one cheiftain Thadkanni Chirrurudaiyan Uyyaninraduvan Gurukulatharaiyan has written a verse. He declars here that he had donated enough quantity of land for the Lord Siva,so that he need not go on begging as a Bikshadana murthy with a begging bow (kapala). This verse is composed in the sense of satire which is also found in a record of Thiruthankal Siva temple (Viruthunagar Dt.) of the same cheiftain. This cheiftain has played a crucial role in the administration during the period of Mar. Sundara Pandya I.

Another interesting record is found in front of the Shanmuka shrine in the outer western prakara of this temple. It reveals the musical notes (Thalanka Pramanam) introduced by one Picchandi Annavi,a resident of Pasuvanthanai Village during 1870 A.D. This notes are engraved on a well blossomed lotus flower so neatly carved on the floor.

Nellaiyappar temple was extended by new mantapas, new shrines and prakaras since the time of middle cholas. These activities are well attested by the records engraved on the pillars and walls bearing these mentapas and shrines. So the architectual history can be easily traceable by these records. One record reveals the donation made by one dancing girl fromMadurai Meenakchi temple who was also honoured by the title 'Thalaikkoli'.Fromthese evidences the great name and influence enjoyed by this temple in the whole pandya region can be known.

**Palayamkottai inscriptions :**

Present Palayamkottai town is mentioned in the medieval inscriptions as Sri Vallaba Chaturvedi Mangalam,named after a Pandya king Sri Vallabha (may be Srimara Srivallabha 815 - 865 AD). It was included in the kilvembanadu and kilkalakkurram sub division. At the centre of this thickly populated brahmin settlement one vishnu temple existed and called as Sri Vallabha Vinnagaram. Among the vattduthe inscriptions found in this temple,the records of Rajaraja chola I are worthy to mention. By these inscriptions donations made as Bharatha Vridhi,Jivitha Lands provisions for temple accountants and musicians are known. This temple was well protected by the liberal donations of later pandya and Thiruvithankur rulers.

Some herostone inscriptions now located at the government museum, originally errected at Ilavelankal village are very useful to know the later history of this region. These are the memorial stones errected for the dead heroes who lost their lives in the war between Vettumperumal of Kayaththar and Venkalarajan of Vijayanagar during 1547 A.D. These dead heroes had belonged to the kondaiyankottai marava community.

The inscription noticed at Tharuvai Village states the construction of one vishnu temple by an individual Raman from Malaimandalam (Kerala) and his land endowment for the maintenance of the same temple.

Four inscriptions fromSankarankovil taluk find place in this volume. One fromKuruvikulam village written in 10C AD. Vatteluthu characters denotes the construction of balipita (altor) by one Natiya chattan fromMenachi village. The other two inscriptions found in the same village are the 19th century records providing informations regarding the land donations by some individuals. A record from Muvirunthali village reveals the creation of Madavilakam, settlements of temple servants by one later pandya king in his title kaliyuka raman. The ancient name of the village is mentioned as Neythazhi.

Six inscriptions noticed at a vishnu temple in Udhayaneri (a) Palamadai village are included in this volume. These records belong 12 - 13th C. AD. Later Pandyas. Two inscriptions mention the creation of one Mukokilandi Chaturvedimangalam by merging so many villages into one. This brahmadeya was created in the name of Mukkokilanadikal, the elder sister of Jat. Kulasekhara Pandya (1162 - 1177 AD) The other two documents mentions the existance of a high road between Manappadai vidu and Madurai (the Pandya capital) and creation of a watershed on this high way. A well was dug and lands were donated to a brahmin to look after that watershed.

Inscriptions from Valliyur village in Nanguneri Taluk belong to later Pandya period,13C A.D. mention the land and ornament donations to the Kailasamudaiyar Siva temple. Another important document narrates the construction of Munruyukamkanta Amman temple by one dancing girl Ulakamuluthudaiyal by name,who was an expert in Santhi Kuthu.

Rajavallipuram village provides 11 inscriptions, all are belong to later Pandya period. Some records deal about the donation of perpetual lamps to the temple. The traders who settled at this village had played a crucial role in the well being of this temple. Their association with this temple are well attested by the inscriptions.

Records from Thiruvenkatanathapuram describes the endowments made for the lighting of perpetual lamps. It is known by some records that the name of the village has been changed as Avani Narayana Chatur Vethimangalam.

Manappadaividu inscriptions provide the original name of the village as Ampalaththadi alais Manappadai vidu. Donations made for lighting perpetual lamps and to recite devotional songs are mentioned in the records.

Sivalapperi Village is the birth place of Mukkudarpallu, a later period literature. This village is famous for its vishnu temple which consists of the records of early pandya,middle cholas and later pandya rulers. The earliest record belongs to 8-9 C. AD. Maran Sadaiyan period mentions the donation of 22 sheep by a lady Anukkan Appi Nangai,for burning a perpetual lamp. He was the wife of one chief Sathru Bayankaramuththaraya of Irunjonadu (present Sathur taluk region). Considerable number of Rajaraja Chola I records reveal the varsious donations made for perpetual lamps and for the up keep of the temple. Kulothunga chola I document and the records of Mar. Sundarapandya are the evidences for the development took place in this temple during their times.

Thiruppudaimaruthur is another notable saivite centre in this region. Inscriptions copied in this temple explicit the various works done by the cholas, pandyas and the chera rulers. The early Pandya Maran Sadaiyan record deals with the donation of 25 sheet for burning a perpetual lamp. Liberal land donations were made during the days of Rajaraja chola and the later pandya rulers. The temple musicians were provided with lands for their lively hood by the chera king Bhuthalavira uthayamarthanda.

Inscriptions of the village Mela sevval deal about the land and lamp donations for the temple. This village is known as virakerala nallur in the inscriptions.

Kallidaikkurichi inscription reveals an interesting social conflict existed between the vellai nadars and vellala community people. Three persons fromvellainadar community had indulged in some mischevious activities with the vellala women. So vellala community people banned the vellanadar peoples not to interfere in their daily cooly works,not to handle the offical duties,and not to work as accountants etc. Hereafter they were not allowed to marry the vellala women. The three culprits were sentenced to death.

One similar record is found and reported from Thiruvithancode village in Kalkulam Taluk in Kanyakumary Dt. This record is dated to 1452. This shows the prolonged enmity existed between vellai nadars and vellalas in the southern region. By these records some researches has claimed that vellai nadars were once exercised some royal power in this region (see TAS Vol IV. part I, Page 58) (Kanyakumari Mavatta KKalvettukal PP 112 - 113)

This volume sheds a flood of light in the region still to be stuided in various perspectives. It will be more useful for the people who are engaged in the feild of social sciences and the students of history.

த.நா.அ. தொல்லியல் துறை

தொடர் எண் : 1/2005

மாவட்டம் : **திருநெல்வேலி**

வட்டம் : **பாளையங்கோட்டை**

ஊர் : **தருவை**

மொழி : **தமிழ்**

எழுத்து : **தமிழ்**

அரசு : **பாண்டியர்**

அரசன் : **கோனேரின்மை கொண்டான்**

ஆட்சி ஆண்டு : **இல்லை**

வரலாற்று ஆண்டு : **இல்லை**

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : –

முதல் பதிப்பு : –

ஊர்க் கல்வெட்டு எண் : 1

**இடம்** : வாழவல்ல பாண்டிஸ்வரமுடையார் கோயில் – தென்புற அதிட்டானம்

**குறிப்புரை** : மலைமண்டலத்துக்காலம் இராமன் தென்கரை நாட்டு கூபகராய நல்லூரில் இளையபெருமாள் விண்ணகர் ஆழ்வார் கோயிலை எழுந்தருளிவித்தான். மேலும் அக்கோயில் திருப்படி மாற்றுள்ளிட்ட வேண்டும் நிமந்தங்களுக்கு நிலதானம் வழங்கிய செய்தியைத் தருகிறது.

**கல்வெட்டு** :

1. ஸ்ரீ.....ப்படி திரிஹுவனச்சக்கரவத்தி கோனேரின்மை கொண்டான் மலை மண்டலத்துக் காலம் (இராமன்).
2. தென்கரை நாட்டு கூபகராயநல்லூரி(ல்) உகந்தருளிவித்த இளையபெருமாள் விண்ணகராழ்வார் கோயிற்ஸ்ரீ வைஷணவர்க்கும் திரு.....இவ்
3. வாழ்வார்க்கும் திருப்படி மாற்றுள்ளிட்ட வேண்டும் நிமந்தங்களுக்கு கீழ்க்களக் கூற்றத்து ஸ்ரீ வல்லமங்கலத்து மேல் பிடாகை தருவை கார் – மவிளை(யும்)
4. நிலத்து பன்னிரு கலவரிசை நிலம் முக்காலே இரண்டுமாவும் பதின்கல வரிசை நிலம் மூன்று மாவும் இவ்வூர் கடமையிருக்கும் கோலால் நிலம் நா.
5. லாவது பசானம் முதல் பாடிகாவலுக்கு தருவதான அச்சு மாவும் காரியவர் ஆட்சியும் வெட்டி பாட்டமும் பஞ்சுபீலி சந்தி விக்கிரப் பேறும் மற்றும் எப்
6. பேர்பட்டினவும் உட்பட தேவதான இறையிலியாயிறுப் பதாக இடப்பெற வேணு மென்று ஐயன் மழவராயர் நமக்குச் சொன்னமையில் இவ்வாழ்வார்.
7. க்குத் திருப்படி மாற்றுள்ளிட்டு வேண்டும் நிமந்தங்களுக்கு கீழ்களக் கூற்றத்து ஸ்ரீ வல்லபமங்கலத்து மேல்பிடாகை தருவை கார்பசானம் விளையும் நிலத்துக்கு
8. பன்னிரு கலவரிசை நிலம் முக்காலே நாலுமாவும் பதின் கலவரிசை நிலம் மூன்று மாவும் ஆக இவ்வூர் கடமையிறுக்குங் கோலால் வேலி நிலம் (இவான்) பேராய் மணவாளன் குலைசேகர தேவனான சுந்தரபாண்டியன் காலிங்கராயன் எழுத்து.

த.நா.அ. தொல்லியல் துறை

தொடர் எண் : 2/2005

மாவட்டம் : திருநெல்வேலி

வட்டம் : சங்கரன்கோயில்

ஊர் : குருவிகுளம்

மொழி : தமிழ்

எழுத்து : வட்டம்

அரசு : இல்லை

அரசன் : இல்லை

ஆட்சி ஆண்டு : இல்லை

வரலாற்று ஆண்டு : கி.பி. 10ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை :

முதல் பதிப்பு :

ஊர்க் கல்வெட்டு எண் : 1

இடம் : சித்தன் காத்த அய்யனார்கோயில் முன் உள்ள பலிபீடம்

குறிப்புரை : மெனசி என்னும் ஊரைச் சேர்ந்த நாட்டியச் சாத்தன் எடுத்த ஒரு பீடம் குறிப்பிடப்படுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்ரீமெனச்சி நாட்டியச்
2. சாத்தன் இட்ட திரு பீ (டம்)

த.நா.அ. தொல்லியல் துறை

தொடர் எண் : 3/2005

மாவட்டம் : **திருநெல்வேலி**

வட்டம் : **சங்கரன்கோயில்**

ஊர் : **குருவிகுளம்**

மொழி : **தமிழ்**

எழுத்து : **தமிழ்**

அரசு : **இல்லை**

அரசன் : **இல்லை**

ஆட்சி ஆண்டு : **இல்லை**

வரலாற்று ஆண்டு : **கி.பி. 19ஆம் நூற்றாண்டு**

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை :

முதல் பதிப்பு :

ஊர்க் கல்வெட்டு எண் : **2**

**இடம்** : மீனாட்சி அம்மன் கோயில் மண்டபத்தூண்

**குறிப்புரை** : சங்கரநாராயண அய்யர் நான்கு தூண்கள் கொடை அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

**கல்வெட்டு** :

1. ஷ மீனாட்சி
2. அம்மன்
3. சன்னதில்
4. மண்டப
5. த்தில் தூண்
6. 8 குருக்கள்
7. சங்கர நாரா
8. யணய்யர்
9. உபயம்.

த.நா.அ. தொல்லியல் துறை

தொடர் எண் : 4/2005

மாவட்டம் : **திருநெல்வேலி**

வட்டம் : **சங்கரன்கோயில்**

ஊர் : **குருவிகுளம்**

மொழி : **தமிழ்**

எழுத்து : **தமிழ்**

அரசு : **இல்லை**

அரசன் : **இல்லை**

ஆட்சி ஆண்டு : **இல்லை**

வரலாற்று ஆண்டு : **கி.பி. 19ஆம் நூற்றாண்டு**

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை :

முதல் பதிப்பு :

ஊர்க் கல்வெட்டு எண் : 3

**இடம்** : ஆனைமலை அய்யனார் கோயில் யானை பீட பாதத்தில் உள்ளது.

**குறிப்புரை** : கிருஷ்ண கரையாழன் என்பவர் கொடுத்த தானம் கூறப்படுகிறது.

**கல்வெட்டு** :

1. மொட்டைய
2. ன்கரையாழ
3. ன் பேறன் கிறி
4. ட்டிணன் கரை
5. யாழன் உபயம்.

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 5/2005

மாவட்டம் : **திருநெல்வேலி**
வட்டம் : **திருநெல்வேலி**
ஊர் : **உதயனேரி (எ) பாலாமடை**
மொழி : **தமிழ்**
எழுத்து : **தமிழ்**
அரசு : **பிற்காலப் பாண்டியர்**
அரசன் : **சடையன் குலசேகர தேவன்**

ஆட்சி ஆண்டு :
வரலாற்று ஆண்டு : **கி.பி. 12ஆம் நூற்றாண்டு**
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 248/1976-77
முதல் பதிப்பு :
ஊர்க் கல்வெட்டு எண் : 1

**இடம்** : வெங்கடேசப் பெருமாள் கோயில் வடபுற அதிட்டானம்

**குறிப்புரை** : குலசேகரன் காலத்தில் உதயனேரி என்னும் ஊர் முக்கோக்கிழானடி சதுர்வேதி மங்கலம் எனப் பெயர் பெற்றது. நிலக்கொடையும், வரி நீக்கமும் கூறப்பட்டுள்ளது.

**கல்வெட்டு** :

1. ஸ்வஸ்திஸ்ரீ பூதல மடந்தை புகழுடன் பொலிய வேதமும் தமிழும் பெருமையில் விளங்க கற்புடைத் திருமகள் பொற்புயத்திருப்ப திக்கிரு நான்கும் சக்கரவாளம் சூழும் புவனம் ஏழும் கவிக்க வெண்குடை.

2. நிழலில் செங்கோல் நடப்ப நாடொறு மதியமும் ஞாயிறும் நலங்கொள்ள ஆடகப் பொருப்பில் அரைசு மனிருப்ப சுந்தர மார்பிலிந்திரன் பூட்டிய ஆரமும் அலங்கமும் அழகுடன் திகழ வீணையும் புலியும் வில்லும் சுரம்புக.

3. ஆணை மன்னவர் அடிமலர் சூட மரபில் வந்த மணிமுடி சூடி விளங்கிய கதிரொளி வீரசிம்மாசனத்துலக முழுதுடை யாரோடும் வீற்றிருந்தருளிய ஸ்ரீகோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவத்தி ஸ்ரீகுலசேகர தே.

4. வர் இருஞ்சோணாட்டு மண்ணையராயன் கோட்டையில் எழுந்தருளியிருந்து கோயில் பள்ளியறைக் கூடத்து பள்ளிப் பீட முனையதரையனில் எழுந்தருளியிருந்து கீழ்களக் கூற்றத்துலகுடைய முக்கோக்கிழானடி சதுர்

5. வேதி மங்கலத்துச் சபையார் செய்ய திருவாய் மொழிந்தருளியபடி தங்களுடன் குடியான நிலங்களில் உடையார் திருநெல்வேலி உடைய நாயனார் தேவதானம் கற்குடியான சுத்தமல்லி நல்லூர் ஆத்தி சிந்தாமணி நல்லூர்ப்பால் ஸ்.

6. வதேவி விளாகமும் இடையாற்றூர்குளம் ஏறங்குளம் வாகைக்குளம் புரவரிநல்லூரும் நீலன்கோன் குளமும் பிராயோடு குளமும் படையெடுப்பான் குளமும் ஆலங்குளமும் ஆக இவ்வூர்கள் எற்றைக்கும் ஐம்பத்தொரு...

7. ந் செயிறுப்பதாகவும் இக்காசிறுக்கு மிடத்துக்கார்... காசும் பிசானம் முப்பத்தேழு காசுமாக இறுப்பதாகவும் முன்பு இக்கோயிலுக்கு சீகாரியம்மாய் நின்ற வீரவினோத பல்லவரையனும் தேவர் கண்மிகளும் தங்களு

8. க்கு முன்பு தந்த அரையோலைப்படியே இறுப்பதாகவும் திறப்புகளும் புறதேவதானமுமான நிலங்கள் வரியிலார் பயிர்பார்த்து பயிர்கொண்ட நிலத்துக்குக் கீழ்க்களக் கூற்றமிறுக்குங் கடமை மாத்தால் நெல்.

9. லு ஒன்பதின் கலனே தூணிப்பதக்கும் நீர் நெல்லு தூணிப்பதக்குமாக இறுப்பதாகவும் இப்பொருளல்லது இக்கோயிலுக்கு ஸ்ரீ காரியஞ் செய்வான் கொள்ளுஞ் சீகாரியப்பேறு காட்சியுட்பட்ட உள்ளானவும் திறப்பு

10. நிலத்துக் காட்சியுள்ளதும் பாட்டமும் வெட்டியும் தேவர் குடிமையும் நம் குடிமையும் தேவதானங்களுக்குக் குடிமைகளும் மற்றும் எப்பேர்ப்பட்டனவும் எற்றைக்கும் தவிந்தோம் தாங்கள்இ

11. றுக்கடவ இக்கடமையை இறுத்து மற்றுந் தங்களை நல...க் இக் கேழ்வி காட்டி ஒன்றும் இராதொழிக வென்று இப்படிச் சந்திராதித்தவத் செல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டிவித்துக் கொண்டனுபவிக்க என்று திருவாய்.

12. மொழிந்தருளினபடி உடையார் இடையாற்றூர் நாட்டுக் கீழ்க்களக் கூற்றத்து உடையான் அரிக்கால் சிங்கத்து மான வீரனான ஸ்ரீ வல்லப மூவேந்தவேளான் எழுத்து... கொழுவனூருடையான் அரையன் தேவனான உண்ணாடுடையான் எழுத்து.

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 6/2005

மாவட்டம் : திருநெல்வேலி
வட்டம் : திருநெல்வேலி
ஊர் : உதயனேரி (எ) பாலாமடை
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : பிற்காலப் பாண்டியர்
அரசன் : கோனேரின்மை கொண்டான்

ஆட்சி ஆண்டு : இல்லை
வரலாற்று ஆண்டு : கி.பி. 12-13ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 249/1976-77
முதல் பதிப்பு :
ஊர்க் கல்வெட்டு எண் : 2

இடம் : வெங்கடேசப் பெருமாள் கோயில் கருவறை தென்புற அதிட்டானம்

குறிப்புரை : பல ஊர்கள் ஒன்றாக்கப்பட்டு மன்னனின் அக்காள் பெயரால் முக்கோக்கிழானடிகள் சதுர்வேதி மங்கலம் எனப் பெயரிட்டு 250 சதுர்வதேி பட்டர்களுக்கு வழங்கப்பட்டது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோனேரின்மை கொண்டான் உலகுடைய முக்கோக் கிழானடி சதுர்வேதி மங்கலத்து சபையார்க்கு தங்களூர் அக்காழ்வி திருநாமத்தால் உலகுடைய முக்கோக்கிழானடி சதுர்வேதி மங்கலமென்று வேதமும் சாஸ்திரமும் போய் பூர்...

2. தியாதர் களாயிருக்கும் சதுர்வேதி பட்டர்கள் இருநூற்றைம்பதின் மற்கு கீழ்க்களக் கூற்றத்து கற்குடியான சுத்தமல்லி நல்லூரும் படையெடுப்பான் குளமும் மாலங்குளமு பர

3. ாயோடு குளமும் நீலன்கோன் குளமும் கீழ்வேம்பை நாட்டு ஆத்தி சிந்தாமணி நல்லூர்பால் சர்வதேவி விளாகமும் இடையாற்றூர் கள நிலம் முக்காலு ஒரு மாவரை வாகைக்குளம் புரவரி நல்லூரும் பாரி

4. மங்கலமும் கொறக்கோட்டையான அபிமான சிவமங்கலமும் கீழெறங்குடியில் பள்ளிச்சந்த நீக்கியுள்ள குளமும் மேலெறங்குடியில் மானாபரணப் பாடியில் ஸ்ரீகுலைசேகர விண்ணகர் எம்பெருமான்.

5. தேவதானமும் பள்ளிச்சந்தமும் நீக்கியுள்ள நிலமும் திருக்களக்குறிச்சியும் கண்டநாட்டு மலையும் பதரூர்பால் திருவாலவாயுடையார் தேவ

6. தானமான சுங்கந் தவிர்த்த விளாகமும் சிறுசெழிய னூரும் இவ்வூர்கள்

முன்னுடையாரையும் பழம்பெயரையும்தவிந்து ஒரு நாட்டினுக் கீழ்களக்கூற்றமும் ஓரூரும் ஒரு புரவாக்கி அணிந்தானப்பனான வீரவினோத பல்ல வரைய

7. ன் பிரமதேயஞ் செய்யப் பெறவேணுமென்று ஐயந் முனையதரையர் நமக்குச் சொன்னமையில் அக்காழ்வி திருநாமத்தால் உலகுடை முக்கோர் கிழானடி சதுர்வேதி மங்கமலமென்னும் பேரால் வேதமும் சாஸ்திரமும் போய் பூர்.

8. தியாதர் களாயிருக்கும் சதுர்வேதி பட்டர்கள் இருநூற்றையம்பதின்மர்க்கு பிரமதேயமாக கீழ்களக் கூற்றத்து கற்குடியான சுத்தமல்லி நல்லூரும் படையெடுப்பான் குளமும் ஆலங்குளம் பிராயோடு குளமும் நீலங்கோன் குளமும்.

9. கீழ்வேம்ப நாட்டு ஆத்தி சிந்தாமணி நல்லூற்பால் சர்வதேவி விளாகமும் இடையாற்றூர்கள நிலமுக்காலே யொருமாவரை வாகைக்குளம் புரவரி நல்லூரும் பாரிமங்கலமும் கொற்கோட்டையான அபிமான சிவமங்கலமும் கீழெறங்குடியில் பள்ளிச் சந்தம் நீக்கியுள்ளநி.

10. லமும் மேலெறங்குடியில் மானாபரணப்பாடியில் ஸ்ரீ குலுசேகர விண்ணகர் ஆழ்வார் தேவதானமும் பள்ளிச்சந்தமும் நீக்கியுள்ள நிலமும் திருக்களக் குறிச்சியும் கண்ட நாட்டு மலையும் பதரூர் பால் தென் திருவாலவாயுடையார் தேவதானமான நிலம் ஏ

11. முமாவரையும் திருமேற்றளிசயுடையார் தேவதானமான சுங்கந் தவித்த விளாகமும் சிறுசெழியனூரும் இவ்வூர்கள் மூன்றாவது பிரசனமுதல் முன் உடையாரையும் பழம் பெயரையும் தவிர்த்து ஒரு நாடு கீழ்க்களக் கூற்றமும் ஓரூரும் ஒருபுரவு மாக்கி இவ்வூர்களில் கற்குடி

12. யான சுத்தமல்லி நல்லூர்... திருதேவதான... நிலங்களால். லாம்... எற்றைக்கு... கடமை....

(கல்வெட்டு முற்றுப்பெறவில்லை).

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 7/2005

மாவட்டம் : **திருநெல்வேலி**
வட்டம் : **திருநெல்வேலி**
ஊர் : **உதயனேரி (எ) பாலாமடை**
மொழி : **தமிழ்**

ஆட்சி ஆண்டு : **இல்லை**
வரலாற்று ஆண்டு : **கி.பி. 12-13ஆம் நூற்றாண்டு**
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 245/1976-77
முதல் பதிப்பு :

எழுத்து : **தமிழ்**
அரசு : **பிற்காலப் பாண்டியர்**
அரசன் : **கோனேரின்மை கொண்டான்**
ஊர்க் கல்வெட்டு எண் : 3

**இடம்** : வெங்கடேசப் பெருமாள் கோயில் கருவறை தென்புற அதிட்டானம்.

**குறிப்புரை** : மணப்படை வீட்டிலிருந்து மதுரைக்குப் போகிற பெருவழியில் ஒரு தண்ணீர்ப்பந்தல் அமைத்து ஒரு கிணறும் வெட்டி நிலமும் கொடுத்த செய்தி கூறப்படுகிறது.

**கல்வெட்டு** :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் கோநேரின்மைக் கொண்டான் உலகுடை முக்கோக் கிழானடி சதுர்வேதி மங்கலத்துசபையார்க்கும் மணப்படை.
2. வீட்டில் நின்று மதுரைக்குப் போகிற வழியில் நெட்டூருடையானான வாழ்வான் காலிங்கராயன் வைத்த தண்ணீர் பந்தலுக்கு.
3. வெட்டுவித்த கிணறுக்கு.....பழி அழிவும் சோர்வும்....கும் வைக்கவும் திரு.....
4. கல் புறமாதங்களில்.... அன்னிய நாமத்தால்... யாகவிலை கொண்.
5. டநிலங்களுக்கு மேல்பிடாகை மேல் எல்லை.... காலுக்கு தெற்குமுதற் கண்ணாற்றுக்கு இரண்டாம் செய் நிலம்.
6. முக்காணியும் அஞ்சாஞ் செய் நிலம் ஒருமாவும் நாலாஞ் செய் நிலம் தேவதானம் நீக்கி நிலம் ஆறாஞ்செய்நிலம் இருமாவரையும்...ஞ்செய் நிலம்
7. ...ஆக (தண்ணீர்பந்தல்) புரம் நிலம் மூன்று மாமுக் காணியும் இ....
8. கண்ணாற்று எட்டாஞ் செய் நிலம் முக்காணி அரைக்காணியுமாக வி....

(கல்வெட்டு முற்றுப்பெறவில்லை)

மாவட்டம் : **திருநெல்வேலி**
வட்டம் : **திருநெல்வேலி**
ஊர் : **உதயனேரி (எ) பாலாமடை**
மொழி : **தமிழ்**

ஆட்சி ஆண்டு : **இல்லை**
வரலாற்று ஆண்டு : **கி.பி. 12-13ஆம் நூற்றாண்டு**
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 246/1976-77
முதல் பதிப்பு :

எழுத்து : **தமிழ்**
அரசு : **பிற்காலப் பாண்டியர்**
அரசன் : **இல்லை**

ஊர்க் கல்வெட்டு எண் : **4**

**இடம்** : மேற்படி கோயில் வடபுற அதிட்டானம்

**குறிப்புரை** : முன் கல்வெட்டில்கூறப்பட்ட தண்ணீர்ப்பந்தலுக்காக மேலும் விடப்படட நிலக்கொடை கூறப்படுகிறது.

**கல்வெட்டு** :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ அருளிச் செயல் உலகுடைய முக்கோக்கிழானடி சதுர்வேதி மங்கலத்து சபையாற்கு மணப்படை வீட்டில் நின்று (மது) ரைக்கும் போகிற பெருவழி உள்ளால் நின்றும் நெட்டூருடையான்... ராஜன் காலி.

2. ங்கராயர் வைப்பித்த தண்ணீர்ப் பந்தலுக்கும் வெட்டுவித்த கிணறு...க்கும்... இவை அழிய கோன்.... வீற்றிருந்தருளினபட்டன் பேரால்.

3. அன்னிய நாமத்தால் விலைகொண்டு இட்ட தங்களூர் மேல்பிடாகை மேல் ஏறங்குடியில்... தேவிவதிக்கு கிழக்கு திருநாதமணி வாய்க்காலுக்கு வடக்கு நோக்கி முதற்கண்ணாலும் இரண்டாம் செய்யும் முக்காணியும் மூன்றாஞ்செய் நிலமுட் ஒருமாவும் அஞ்சாம் செய் தேவதா

4. னம் நீக்கி நிலம் முக்காணியும் அஞ்சாஞ்செய் நிலம் ஒரு மாவும் ஆறாஞ்செய் நிலம் காணி ஆக தண்ணீர் பந்தல்புரம் மூன்றே முக்காணியும் வைத்து தண்ணீர் அடைத்து பார்த்து நிற்கும் பிராமணர்க்கும் ஜீவனத்துக்கும் நிலம் முதலாக விட்ட...

(கல்வெட்டு முற்றுப்பெறவில்லை)

| | | | |
|---|---|---|---|
| த.நா.அ. தொல்லியல் துறை | | தொடர் எண் | : 9/2005 |
| மாவட்டம் | : திருநெல்வேலி | ஆட்சி ஆண்டு | : |
| வட்டம் | : திருநெல்வேலி | வரலாற்று ஆண்டு | : கி.பி. 1525<br>சகம 1447<br>கொல்லம் 700 |
| ஊர் | : உதயனேரி (எ) பாலாமடை | இந்தியக் கல்வெட்டு | |
| மொழி | : தமிழ் | ஆண்டு அறிக்கை | : 247/1976-77 |
| எழுத்து | : தமிழ் | முதல் பதிப்பு | : |
| அரசு | : தென்காசி பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு | |
| அரசன் | : | எண் | : 5 |

**இடம்** : வெங்கடேசப் பெருமாள் கோயில் கருவறை மேற்குச் சுவர்.

**குறிப்புரை** : சென்பகராம சதுர்வேதி (மங்கலத்தில்) நடராசர்க்கும், சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் கொடுக்கப்பட்ட தானம்.

**கல்வெட்டு** :

1. �ஸ்வஸ்திஸ்ரீ சகாபதம் 1447 மேல்
2. செல்லா நின்ற கொல்லம் 700 வருசம் வைகாசி
3. மாசம் 29ஆம் தேதி பூர்வ பட்சத்து திரிதியையும் வியா
4. ழ வாட்சையும் பிரவயோகமும் புனர்பூச
5. நட்சத்திரமும் பெற்ற நாள் செய்த தான பூர்வ
6. புண்ணிய... யான்செ
7. ண்பகராம சதுர்வேதியில் கூத்தாடு வே
8. ண்ட வளந்த பிள்ளையாற்கும் நயினார் காளை
9. யார் சோமநாத தேவர்க்கும் நயினார் செண்ப
10. கராம விண்ணகர் எம்பெருமானுக்கும் தி
11. ருக்கானைப் போர்க் கூற்றத்து திருவெள்(ளரை)

12. உடையார் திருச்சிற்றம்பலம் உடையானேன்

13. உதகபூர்வ தன்ம தான பிரமாணம் பண்ணிக்கு

14. டுத்த பரிசாவது உடையார் திருநெல்வேலி உடைய

15. நயினார் சீபண்டாரத்தில் நின்றும் எங்கள்

16. பேரனார் உனதயாபகார சண்டேஸ்வர விலைபிர

17. மானமும் வாங்கி கையாண்டு போதுகிற....

(கல்வெட்டு முற்றுப்பெறவில்லை)

மாவட்டம் : **திருநெல்வேலி**
வட்டம் : **திருநெல்வேலி**
ஊர் : **உதயனேரி (எ) பாலாமடை**
மொழி : **தமிழ்**
எழுத்து : **தமிழ்**
அரசு : -
அரசன் : -

ஆட்சி ஆண்டு : -
வரலாற்று ஆண்டு : **கி.பி. 13ஆம் நூற்றாண்டு**
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : -
முதல் பதிப்பு : -
ஊர்க் கல்வெட்டு எண் : **க.எ. 6.**

**இடம்** : வெங்கடேசப் பெருமாள் கோயில் கருவறை தெற்குச் சுவர்.

**குறிப்புரை** : முற்றுப்பெறாத துண்டுக் கல்வெட்டு.

**கல்வெட்டு** :

1. கீழ் களக் கூற்றத்து உதய நேரியில் குளத்தில்
2. ழகிய சோமனாத தேவன் திருத்து நில(ம்) பதினு
3. ன்கும் பனை(ம) பற்றுக்கும் மனையளுக்கும்

.....கயவது

த.நா.அ. தொல்லியல் துறை

தொடர் எண் : 11/2005

மாவட்டம் : திருநெல்வேலி

வட்டம் : நான்குநேரி

ஊர் : வள்ளியூர்

மொழி : தமிழ்

ஆட்சி ஆண்டு : 14

வரலாற்று ஆண்டு : கி.பி. 1230

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : –

எழுத்து : தமிழ்

முதல் பதிப்பு : –

அரசு : பாண்டியர்

அரசன் : சுந்தர பாண்டியன்

ஊர்க் கல்வெட்டு எண் : 1

இடம் : அ/மி சொக்கநாதர் கோயில் கருவறை மேற்குச் சுவர்

குறிப்புரை : நிலக்கொடை கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ மெக்கீர்த்திக்கு கோமாற
2. பன்மரான திரிஹுவனச் சக்கரவத்தி, சோணாடு வ
3. ழங்கியருளிய சுந்தரபாண்டிய தேவற்கு யாண்.
4. டு யிசவது வைகுந்த வளநாட்டு ஊ ரொம்
5. இவ்வூர் உடையார் ஆதித்த யீசுவரர் கோயிலி
6. ல் ஆதித்தண்டெசுர தெவற்கு ந(ட்டி)க் குடுக்க
7. சம்மதித்துத் திருச் சூலக் கல்லு நாட்டிக் குடுத் தெ.
8. தாம் சிற்றூர் ஊரொம் தண்டெசுர தெவற்கிவை
9. அரையன் உலகுய வந்த பெருமாள் இ,ப்படிக்கி
10. வை வேளான் எண்ணங் கடந்தாஞன.... மணிமு
11. தரிவந்த வேளாளெழுத்து இப்படிக்கிவை... இடை
12. யாஞன குலசேகர இராசராச விழுப். ..

த.நா.அ. தொல்லியல் துறை  தொடர் எண் : 12/2005

மாவட்டம் : திருநெல்வேலி  ஆட்சி ஆண்டு : 14

வட்டம் : நான்குநேரி  வரலாற்று ஆண்டு : கி.பி. 1230

ஊர் : வள்ளியூர்

மொழி : தமிழ்  இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை :

எழுத்து : தமிழ்  முதல் பதிப்பு :

அரசு : பாண்டியர்

அரசன் : முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன்  ஊர்க் கல்வெட்டு எண் : 2

**இடம்** : அ/மி சொக்கநாதர் கோயில் கருவறை மேற்குச் சுவர்.

**குறிப்புரை** : கைலாச முடையான் என்பவன் பள்ளியறை நாச்சியார்க்குப் பொன்னால் ஆன திருப்பாடகம் இரண்டு செய்து அளித்த செய்தி கூறப்படுகிறது.

**கல்வெட்டு** :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீகொ
2. மாற பன்மரா
3. ன திருஹவன
4. ச் சக்கரவத்தி
5. ஸ்ரீ சோணாடு
6. வழங்கி அருளி
7. ய சுந்தர பாண்டிய
8. தெவற்க்கு யாண்ட
9. டு ய்ச வது கயி
10. லாயமுடை யான
12. திருப்பள்ளி ய ள
13. ற நாச்சியார்க்கு (இ)
14. ட்ட திருப்பாடகம்
15. உரு இரண்டிநா
16. ல பொன் கழஞ்சு
17. சு ஒன்
18. ச்சா...
19. ந. வட்ட ணைக்
20. கால் ஒன்றினு
21. ல் இடை பதினு
22. (று) பலம்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 13/2005

மாவட்டம் : **திருநெல்வேலி**
வட்டம் : **நான்குநேரி**
ஊர் : **வள்ளியூர்**
மொழி : **தமிழ்**

ஆட்சி ஆண்டு : **இல்லை**
வரலாற்று ஆண்டு : **இல்லை**

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை :
முதல் பதிப்பு :

எழுத்து : **தமிழ்**
அரசு : **பாண்டியர்**
அரசன் : **இல்லை**

ஊர்க் கல்வெட்டு எண் : **க.எ. 3**

**இடம்** : அ/மி சொக்கநாதர் கோயில் வளாகம் அம்மன் சன்னதி வடக்குச் சுவர்.

**குறிப்புரை** : நிலவிலை ஆவணம் சாட்களின் பெயர்கள் மட்டும் உள்ளன.

**கல்வெட்டு :**

1. றும் காணிவிச்சாதிரச் தறுதம்பரிலும் சோழ பாண்டியன் தெரிந்த வில்லிக்கு... டட விலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்த நிலத்துக்கு எம்மிலிசைந்த (நீ)ரக்கி இருக்கிற தவசியர் இவற்கு இந்நிலத்தில் வடமெல் மூலையிலெ ஒரு மாநிலத்துக்கும் ஆதித்தன் மதுரொதையனுன மதுரொதைய மங்கல நாடாழ்வாற்கு சந்திராதித்தவல் செல்வதாகக் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிவித்துக் கலிசென்ற திசை வென்ற விஞயகப் பிள்ளோ யராகவும் இப்படி அமுது செய்வித்து இக்கோயிலும் (கு) டமுழுக்கு திருப்பணி செய்விப்

2. ந்தர பாண்டிய நாடாழ்வான் தற்குறியார் தன்மைக்கும் இப்படி (அ)றிந்தும் இப்படிக் குடி நம்பி பெரியான் எழுத்து இப்படிக்கு ஆதிமைக்கு இப்படிக்கும் இவை படை முதல் கணக்கு அழகிய பாண்டிய விழுப்பரை யனெ எழுத்து. இப்படிக்கு இவை பெரியான் நம்பியான் செம்பிய நாடாதின்மைக்கு நம்பி அழகனை திருவைபோத்தி நாடாழ்வான் தற்குறி கலியுடையாஞன பலமண்டலப் பெரை வீரபாண்டியக்குலம் தலை நாடாழ்வான் தற்குறியானதன் ரயிரஞன் முனையதரைய நா....

(கல்வெட்டு முற்றுப்பெறவில்லை)

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 14/2005

மாவட்டம் : **திருநெல்வேலி**
வட்டம் : **நாங்குநேரி**
ஊர் : **வள்ளியூர்**
மொழி : **தமிழ்**

ஆட்சி ஆண்டு : **4**
வரலாற்று ஆண்டு :
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : **கி.பி.13ஆம் நூற்றாண்டு**

எழுத்து : **தமிழ்**
அரசு : **பாண்டியர்**
அரசன் : **வீரபாண்டியன்**

முதல் பதிப்பு :
ஊர்க் கல்வெட்டு எண் : **4**

**இடம்** : வடக்குவாய்ச் செல்வி அம்மன் கோவில் (மூன்றுயுகங் கொண்ட அம்மன்) கருவறை தெற்குச் சுவர்.

**குறிப்புரை** : உலகமுழுதுடையார் என்ற சாந்திக்கூத்தி வள்ளியூரில் வடக்கு வாய்ச் செல்வி அம்மன் கோயில் கட்டியதைத் தெரிவிக்கிறது.

**கல்வெட்டு** :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய வன்மரான திரி
2. ஈவன சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய
3. தேவற்கு யாண்டு சவது ரா
4. வள நாட்டு திருவானைக் காவில்
5. திருப்பதியில் சாந்திக் கூத்திகளில்
6. சொக்கத் தாயர் ( ஸடாரகன் உலக(மு)
7. முதுடையார் வள்ளியூர் வடக்கு (வ)
8. ாசலில் தேவி கோயிலுக்கு உபானஜ்ஜ
9. கதிகுமுதவரி பட்டிகை (நி) வந்தமாக
10. க விடையும் வ்ருஷிச்சு தந்த... ந்தவீ
11. ரர் சிறிய பிள்ளை (யை) உலகத் (தள் எழு) ந்1
12. தரு (ளி)வித்து ஆதேவியும்
13. ருளிவித்(து) இக்கோயிலில் ய22
14. ஞ் சேதார் உலகமுழு துடையார்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 15/2005

மாவட்டம் : **திருநெல்வேலி**
வட்டம் : **பாளையங்கோட்டை**
ஊர் : **பாளையங்கோட்டை**
மொழி : **தமிழ்**
எழுத்து : **வட்டெழுத்து**
அரசு : **சோழ அரசர்**
அரசன் : **முதலாம் இராசராசன்**

ஆட்சி ஆண்டு : 15
வரலாற்று ஆண்டு : கி.பி. 1000
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : இல்லை
முதல் பதிப்பு :
ஊர்க் கல்வெட்டு எண் : 1

இடம் : பாளையங்கோட்டை – கோபால்சாமி கோயில் மஹாமண்டபம் தென்புற அதிட்டானம்.

குறிப்புரை : பாரதம், இராமாயணம் வாசிப்பிற்கு விருத்தியாக விடப்பட்ட நிலம் பற்றிக் கூறப்படுகிறது. கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

கல்வெட்டு :

1. தேசுகொள் கோ ராஜ ராஜ ராஜ கேசரி வன்மர்க்கு யாண்டு பதினஞ்சாவது கீழ்களக் கூற்றத்து வ்ருஹ்ஹெயம் ஸ்ரீ (வல்லப) மங்கலத்து மஹாஸஹையோம் தொண்டை நாட்டு முனைப்பாடி கீழாமூர் நாட்டு மருத்துவம...

2. முறலாக வடக்கு இரண்டாங்கால் கை.. நுணி உருத்த வாய்க்காலுக்கு மேற்கு முதற் செய்யில் தெற்கடைய காணியும் தென் கண்ணாற்று முன்றாஞ் செய்யில் வடக்கடைய காணியுமாக நி.

3. லையடைய நிலன் அரைக்காணியும் முன்றாஞ் (செய்யரையுமாக) நிலன் காணியே யரையும் நாற்பத்து மூன்றாமது வா (ஞ்) சகத்தார் நிலக்கிழிப்பில் தொற்றிப்பட்டு பொது நிலமாய் கிடந்த இக்காணியரையும்

4. ...ரிகையும் இ ...யதெற்க்கில் ல்லாக தெற்கில்.... நாராசத்துக்கு கிழக்கு பத்தாஞ்செய்யில் கிழக்கடைய அரைமாவும் இதன் தெற்கில் அஞ்சாங்கால் வடகண்ணாற்று இந்நாரசத்துக்கு

5. ச்சூ மிஞ்ச (ஊர்க்காணியும்) க்குவட.... ஞசாங்கால்.... கண்ணாற்று (நீர்) பற்றுக்கு வடக்கு பதினைஞ்சாஞ் செய்யில் (தெ)ற்கடைய அரைக்(கா)ணியும் பதினொராஞ் செய்யில் தெ

6. ன் மூன்றாஞ் செய்யில் (கீ)வழ்வு ஸ (வா)ய்க் காலுக்கு செய் நிலன் முக்காணியும் எழு(ப)த்து நாலவது பத்துக்கு தெற்கிழிச்சு நிலம் இரி முக்காணியும் இதன் கிழக்கில் பதினைஞ்சாங்கால் கீழ்கண்ணாற்று நாரசத்துக்கு(மே)

7. ரைக் காணியுந்திர...யும் ப (தநது) வாற்றாகண்ணார் கிழிச்சுவிட்ட இக்காணியரைக் காணி முந்திரிகையும் இதன்கீழை மூன்றாங்கால் கீழ்க்கண்ணாற்று நாராசத்துக்குத் தெற்கு இரண்டாஞ் செய்யில் காணியும் கீ(ழ)

8 முக்காணியே யரையும் ஸ்ரீபரதமும் ஸ்ரீ ராமாயணமும் வாசிப்பாற்கு விருத்தியாவதாகவும் இச் செம்பியன் மூவேந்தவேளா ரேய் இஸ்ரீ வீர நாராயண விண்ணகர் (ம்பி) இப்பெருமானம்(பி) களுக்கு நொ.

